கணக்கு சொல்லப்படுகிறது. முழுமையான விவரத்தைச் சேகரித்த பிறகுதான் அதன் பின்னாலே எப்படிப்பட்ட உதவி களை அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கமுடியும் என்று அரசு முடிவு எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பரமக்குடி போன்ற பகுதிகளில் நூல் விலை உயர்வாலும் நூல் கிடைக்காததாலும் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ், திருவாளர்கள் குமரி அனந்தன், எச். எம். ராஜு மற்றும் ஜி. ஜி. குருமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்பு மிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியிலும், எமனேசபுரத்திலும் கைத்தறி நெசவாளர்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''தமிழகத்தில் பரமக்குடி போன்ற'' என்று தொடங்குங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, பரமக்குடி தொகுதி பரமக்குடியிலும், எமனேசபுரத்திலும், உள்ள கைத்தறி நெசவாளர்கள் நூல் கிடைக்காமல்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாங்கள் கொடுத்து இருக்கிறோமே. அது கையிலே இல்லையா? அதைப் படியுங்கள்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் பரமக்குடி போன்ற பல்வேறு பகுதி களில் நூல்விலை உயர்வாலும் மற்றும் நூல் கிடைக்காததாலும் நெசவாளர்கள் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

1990 ஏப்ரல் 23] [திரு. ச. தங்கவேலு]

அறிக்கை.

பரமக்குடியில் 20 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ..எமனேஸ்வரம் பகுதியில் 23 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் முறையே 4,271 மற்றும் 4,187 உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இப்பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் நிதி பற்றாக்குறை இல்லை. அனைத்து சங்கங்களிலும் போதுமான பண வசதி, காசுக்கடன் (cash credit) கணக்கில் இருந்து வருவதால் அங்கத்தினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே நூல் கொடுக்கப்படவில்லை என்ற பிரச்சினை எதுவும் எழவில்லை. இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்களுக்கு வெளிச் சந்தையில் நல்ல மார்க்கெட் இருப்பதாலும், இத்துணி ரகங்களுக்கு தள்ளுபடி மானியம் வழங்கப்படுவதாலும், உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்கள் தேக்க நிலை எதுவும் இல்லாமல் விற்பனை செய்யப்படுகிறது.

கோ-ஆப்டெக்ஸ் மூலம் (1) கடந்த 1988–89, மற்றும் 1989–90 (பிப்ரவரி 1990) முடிய கொள்முதல் செய்யப்பட்ட துணியின் மதிப்பு முறையே ரூ. 94,30,667 மற்றும் ரூ. 65,97,314 ஆகும்.

(2) கடந்த 1–8–1989 முதல் 28–3–1990 வரையிலும் இப் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட பல்வேறு நூல் ரகங்கள் அளவு முறையே 4,510 மற்றும் 1,890 கட்டுகள் ஆகும்.

செயற்கை பட்டு விநியோகம் முறையே 3,150 மற்றும் 3,115 கிலோ ஆகும்.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்த மட்டில், ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு நூல் ரகங்களுக்கு ஒவ்வொரு மாதமும் வெளிச்சந்தை நூல் விலை, தேசிய பஞ்சாலை கழகத்தின் நூல் விலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரால் நூல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்படும்

[திரு. ச. தங்கவேலு] [1990 ஏப்ரல் 23

நூல் விலை வெளிச்சந்தை விலையை விட எப்பொழுதும் குறைவாகவே இருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக சில முக்கிய நூல் ரகங்களின் விலை கீழ்க்கண்ட அட்டவணையில் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது :

நூல் நம்பர் (கட்டுகளில்). (1)	வெளிச் சந்தை கு.ப. அளவு. அ.ப. அளவு. (2)	விலை என்.டி.சி. கு.ப. அளவு. அ.ப. அளவு. (3)	விலை கூட்டுறவு சங்கங்களுக் குரியது, (4)		விலை ரூபாயில் வித்தியாசம் (2–4) மற்றும் (3–4). (5)	
20 எஸ்	165	190	180	166	24	16
40 எஸ்	232	270	244	210	60	34
60 எஸ்.கே.	315	375	313	280	95	33
60 எஸ். கே.	400	435	..	375	60	..
80 எஸ்.கே.	430	440	430	420	20	10
80 எஸ்.சி.	535	560	520	530	40	..
100 எஸ்.சி.	655	720	650	635	85	15
2/17	215	222	..	192	30	..
2/40 எஸ்.	265	275	..	240	35	..
2/60 எஸ்.	340	358	..	315	43	..

சி—கோம்டு. கே—கார்டு.

இவ்வாறு விலை நிர்ணயம் செய்யப்படும் நூல் ரகங்கள் அரசு ஆணை எண். 130, கைத்தறிகள், கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 18–5–1989-ன்படி முதலாவதாக மாநில பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இரண்டாவதாக தனியார் கைத்தறி நெசவாளர் அமைப்புகளுக்கும், மூன்றாவதாக விசைத்தறி நெசவாளர் அமைப்புகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் சிட்ட நூல் உற்பத்தி சம்பந்தமான அறிக்கை என்.சி.இ.ஆர். 12/86-சி.எல்,பி., நாள் 25–2–1987-ன்படி கூட்டுறவு நூற்பாலைகள் தங்கள் மொத்த உற்பத்தி திறனில் 5 சதவீதத்துக்கு மேலான சிட்ட நூல் உற்பத்தி செய்துவருகின்றது

213980
சென்னை-600 009

1990 ஏப்ரல் 23] [திரு. ச. தங்கவேலு]

இவ்வறிக்கையை ஏற்று 50 சதவிகிதம் சிட்ட நூல் உற்பத்தி செய்யத் தவறிய தனியார் ஆலைகள் மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள மாநில கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்தின்கீழ் அதிகாரம் வழங்கும்படி மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல் ரகங்கள் நெசவாளர்களுக்கு சலுகை விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் வெளிச்சந்தை நூல் விலை பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்களுக்கு நூல் தட்டுப்பாடு, விலை ஏற்றம் போன்ற பிரச்சினைகள் எழாமல் இருக்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் கிடைக்காததால் நெய்த துணிகளைக் கூட விற்க முடியாத அளவிற்கு கைத்தறிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் நலிந்து, இதனால் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். இதன் காரணமாக கூட்டுறவுச் சங்க கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். தற்போது எலக்டட் பர்சன்ஸ் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களாக இல்லாததால் எஸ்.ஓ—க்கள் போடப்பட்டுள்ளது. ஒவ்வொரு எஸ்.ஓ—க்கும் 5, 6 கூட்டுறவுச் சங்கங்களுடைய கணக்கைப் பார்க்க, சரி பார்க்க வேண்டிய நிலைமை தினமும் எஸ்.ஓ—க்களுக்கு வருவதால், நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் எஸ்.ஓ—க்களுக்கு இல்லை. நெய்த துணி ஸ்டாக் இருந்தும்கூட வியாபாரிகளுக்கு — எஸ்.ஓக்கள் இல்லாத காரணத்தால், நெய்த துணிகளைக் கூட விற்க முடியாமல் ஸ்டாக்காக தேங்குகிறது. விற்க முடியாத காரணத்தால் இருப்பில் பணம் இல்லாமல் நூல் வாங்க முடியாத சூழ்நிலை உள்ளது. அதனால் கூட்டுறவு சங்க நெசவாளர்கள் தனியார்களிடம் நூல் வாங்கி நெய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால் நூல் கிடைக்காமல் கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவு சங்க நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நூல் கிடைக்க நூல் பாங்க் அமைக்கவும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க தேர்தலை சீக்கிரம் நடத்தவும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

10-35 மணி.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி மற்றும் எமனேஸ்வரம் பகுதியில், பரமக்குடியில் 20 கைத்தறி நெசவாளர்

[திரு. ச. தங்கவேலு] [1990 ஏப்ரல் 23

சங்கங்களும், எமனேஸ்வரம் பகுதியில், 23 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் இருக்கின்றன. அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற துணி வெளி மார்க்கெட்டில் நல்ல விலை போகக் கூடிய துணியாக இருக்கிறது. தற்போது அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் போதுமான பண வசதி, கடன் வசதி போன்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கே உற்பத்தி செய்யப்பட்ட துணியை விரைவிலே விற்பனை செய்வதற்கு இந்த ஓராண்டுக் காலத்தில் 90 நாட்களிலே தள்ளுபடி மானியம் அறிவிக்கப்பட்டிருப்பதன் காரணத்தால் துணிகள் தேக்கம் இல்லாமல் அந்த நெசவாளர் கூட்டுறவு சங்கத்திலே விற்பனை செய்யப்படுகின்றது. குறிப்பாக 1988-89, 1989-90, பிப்ரவரி 90 வரையிலும் பரமக்குடி பகுதியில் ரூ. 94,30,669 க்கு துணி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எமனேஸ்வரம் பகுதியில் ரூ. 65,97,314-க்கு உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து நூல் தட்டுப்பாடு இல்லாமல் அந்த உதவி இயக்குநர் மூலமாக எந்தெந்த நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு அந்த நூல் தேவையோ அதைக் கருத்தில் கொண்டு உதவி இயக்குநர் மூலமாக கோ-ஆப்டெக்ஸ் அதிகாரியும் இணைந்து தட்டுப்பாடு இல்லாமல் நூல் வழங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் நூல் 4510 மற்றும் 1890 கட்டுகள் தட்டுப்பாடு இல்லாமல் அந்தப் பகுதிகளிலே வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற விளக்க உரையைப் படித்தேன். ஆனாலும் பரமக்குடி, எமனேஸ்வரம் பகுதிகளில் இருக்கின்ற ஏறத்தாழ 43 கூட்டுறவு சங்கங்களிலே இப்படிப்பட்டவர்கள் சென்று தனி அதிகாரிகளிடம் போய் கேட்டால் அவர்கள் ஊடுக்கு நூல் இல்லை, பாவுக்கு நூல் இல்லை என்று சொல்கிறார்கள் என்ற தகவலும் இருக்கிறது. இரண்டாவது 'எங்களுக்கு கோ-ஆப்டெக்சிலிருந்து வருகின்ற ரிபேட் வராத காரணத்தாலே எங்களுக்கு தொல்லைகள் இருக்கின்றன. அதனாலே உங்களுக்கு நாங்கள் சரிவர சேவை செய்யமுடியாது' என்ற தகவலையும் அவர்கள் கொடுத்ததாக இங்கே கடிதம் எழுதியிருக்கிறார்கள். இது இங்கே மட்டுமல்ல — இங்கே மட்டும்தான் நான் பேசவேண்டும், கவன ஈர்ப்பு அது தான் — தமிழகம் முழுவதுமே இப்படிப்பட்ட ஒரு நிலை இருப்பதாக கடிதம் எழுதியிருக்கிறார்கள். மதுரையிலிருந்து ராம்பாபு, எம்.பி. அவர்களும் அதனைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். உதாரணமாக என்னிடம் வந்த ஒருவர் பட்டு நூல் என்பதை மார்ச், ஏப்ரல் மாதங்களிலே கணக்கு எடுப்பது என்றிருந்தால், முதலிலேயே கொடுத்து விடுவார்களாம். ஆனால் இந்த தடவை முதலிலே

1990 ஏப்ரல் 23] [திரு. குமரி அனந்தன்]

கொடுக்காத காரணத்தால் கணக்கு எடுக்கிறோம் என்று சொல்லி பட்டு நூல் கொடுக்கவில்லை. 'எங்களுக்கு முதலிலே கொடுக்கவில்லை. எனவே நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம்' என்று சொல்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்களை நாங்கள் கேட்டுக்கொள்வது பரமக்குடி, எமனேஸ்வரம் பகுதிகளிலே, இதை நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு வாழ்வு கொடுப்பதோடு, நீங்கள் இன்னும் சற்று அதிக அக்கறையோடு இங்கே கவனித்து அதிகாரிகள் கொடுத்திருக்கிற கணக்கையெல்லாம் சரிபார்த்து அது சரியாக இருக்கிறதா என்று பார்த்து, தமிழ்நாட்டையும் கணக்கில் எடுத்து இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு நல்லதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசிலிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு இந்த கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம் மானிய விலையிலே வெளிச் சந்தையை விட குறைவான விலையிலே நாங்கள் நூல்களை வழங்குகிறோம். அதுமட்டுமல்ல, தனியார் கைத்தறியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு, அந்த அமைப்பிற்கு வெளியிலே உள்ளவர்களுக்கு போதுமான மானிய விலையிலே நாம் நூல்களை வழங்குகின்றோம். இந்த ஓராண்டு மட்டும் ரூ. 29 இலட்சம் மானிய விலையில் தனியார் கைத்தறியாளர்களுக்கு வழங்கியிருக்கிறோம். கூட்டுறவு நூற்பாலையின் மூலம் இந்த நெசவாளர் சங்கத்திற்கு வெளிச் சந்தையைவிட குறைந்த விலையிலே நூல் கொடுத்ததன் காரணமாக அரசுக்கு மட்டும் ரூ. 8 கோடி இழப்பு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது தமிழகத்திலுள்ள அனைத்து நெசவாளர் சங்கங்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் நூல்கள் வழங்கவேண்டுமென்றுதான் ஒவ்வொரு தனி அதிகாரியின் மூலம் வேண்டிய ரகங்கள் எவ்வளவு, எவ்வளவு தேவை என்ற கணக்கையும் எடுத்து உதவி இயக்குநர் மூலமாக, கோ–ஆப்டெக்ஸ் அதிகாரிகளையும் இணைத்து இந்த நூல் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி கோ–ஆப்டெக்ஸ் தனி அதிகாரிகளுக்கும், கைத்தறி இயக்குநர் அவர்களுக்கும் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டு, அது நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10.40 மணி

*திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்க உரையில் கோ-ஆப்டெக்ஸ் மூலம் கடந்த 1988–89–லும், 1989–90–லும் கொள்முதல் செய்யப்பட்ட துணியின் மதிப்பு முறையே ரூ. 93,30,667, ரூ. 65,97,314 'என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியில் அவர்களுடைய நூலுக்கு நல்ல விற்பனையிருக்கும் என்று சொல்கிறார்.

இந்த வகையில் கோ—ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யப் படும் துணியின் மதிப்பை இன்னும் அதிகரிக்க முன் வருவாரா? அதேபோல், 1—8—1989 முதல் 28—3—1990 வரையிலும் இந்த இரண்டு பகுதிகளிலும் பல்வேறு நூல் ரகங்கள் அளவு முறையே 4,510, 1,890 கட்டுகளும் என்று கொடுத்திருக்கிறார் கள். இந்த கட்டுகளையும் இன்னும் அதிகரித்துக் கொடுத் தால் நாங்கள் சொல்லுகின்ற குறைகளைத் தீர்க்க முடியும் என்ற வகையிலே அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலனையில் மேற்கொள்ளப்பட்டு அந்த இலக்குகளை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய விளக்க உரையிலே, என்னுடைய தொகுதியிலே இருக்கக் கூடிய சில கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய விவரங் களைக் கேட்டிருந்தேன், அந்த விவரங்கள் இல்லை. ஆனால், பொதுவாக எல்லா கூட்டுறவுச் சங்கங்களுக்குமே இந்த நிலைமை பொருந்தும் என்பதனாலே 'ரிபேட்' கொடுப் பதிலே சில காலதாமதம் ஏற்படுவதனாலே அவர்களுக்கு நூல் கொள்முதல் செய்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவதாக அவர் கொடுத்திருக்கக் கூடிய விலைப் பட்டியலைப் பார்க்கின்றபோது 2.17 என்கின்ற நூலின் விலை இப்பொழுது இந்த ஒரு வாரத்திலேயே ரூ. 205 என்று விலையேறியிருக்கிறது. அதே போன்று 10–ம் நம்பர் நூல் என்பதும் விலையேறி யிருக்கிறது. கிடைக்கக் கூடிய நூலினுடைய தரமும் குறை வாகயிருக்கிறது. சபாநாயகர் அவர்கள் அனுமதிப்பார்களே யானால் இப்பொழுது கூட்டுறவுச் சங்கத்திற்கு வரக் கூடிய இந்த நூலினுடைய மாதிரியை ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு தனியாக அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கொடுங்கள். இப்போது கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : உடனடியாக குறைகளை நீக்கி அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு காலா காலங் களிலே நிரந்தரமான ஒரு ஏற்பாடாக செய்ய வேண்டும். அப்படி கூட்டுறவு மில்களினாலே கொடுக்க முடிய வில்லை என்று சொன்னால் வேறு வெளி மார்க்கெட்டிலிருந்து

வாங்குவதற்கான அனுமதியை அவர்களுக்கு நிச்சயமாக கொடுக்க வேண்டும். ஆகையினாலே இதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் தள்ளுபடி மானியத் தொகை எந்த சங்கத்திலே காலதாமதம் என்று குறிப்பிட்டால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் 2.17 போன்ற நூல்கள் ஈரோடு மாவட்டத்திலே அதிகப்படியாக தேவைப்படுகிற காரணத்தினாலே அந்த நூலை அதிகமாக நெசவாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று சென்னிமலையிலே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 'டபில்யூ யூனிட்' 2.17 ரகத்தை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு ஆலையை ஏற்படுத்தி இந்த நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். அந்த ஆலை இயக்கப்படுகிற காலத்தில் தட்டுப்பாடு இல்லாமல் நூல்கள் வழங்க முடியும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

6. அறிக்கை அளித்தல்.

சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு.வீ.பெ.துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1990-91 ஆம் ஆண்டுக்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 5 ஆம் அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1990) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்,